1989 ஏப்ரல் 24]

ஆதி திராவிடக் கிருத்துவர்களுக்கு சலுகைகள்

116—(* வினா எண். 810)— திரு. வ. முல்லை வேந்தன், திருமதி பாப்பா உமாநாத் திரு மா. மணிமாறன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

ஆதி திராவிட மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் ஆதி திராவிட கிருத்துவர்களுக்கும் வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகளில், கல்வி நிலையங்களில் சேர்க்கை மற்றும் மாநில அரசுப் பணிகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்பு ஆகியவைகளில் 18 சதவீத இட ஒதுக்கீடு தவிர, மற்ற சலுகைகள் அனைத்து ஆதிதிராவிட கிருத்துவர்களுக்கும் வழங்கப்படுகின்றன.

திரு. வ. முல்லைவேந்தன் : தலைவர் அவர்களே, உள்ளாட்சித்துறை மூலமாகக் கட்டிக் கொடுக்கப்படுகிற தொகுப்பு வீடுகள் ஆதிதிராவிடக் கிருத்துவர்களுக்குக் கட்டித்தருவதில்லை; எனவே வழங்கப்படுகிற சலுகைகளை முறையாகப் பயன்படுத்தி, அப்படிப்பட்ட வீடுகள் அவர்களுக்கும் கட்டித் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆதி திராவிடக் கிருத்துவர்களுக்கு இலவசக் கல்வி, படிப்புத் தொகைகள், இலவச சீருடைகள் மற்றும் மாணவர் இல்லங்களில் உணவு மற்றும தங்கும் உதவி, கறவை மாடுகள் வாங்க நிதி உதவி, சிறு வணிகர்களுக்கு கடன் உதவி, சுய வேலை வாய்ப்பு பெற்றவர்களுக்குத் தேவையான சாதனங்கள் மற்றும் கருவிகளை இலவசமாக வழங்குதல் உழவு மாடுகள் வாங்க நிதி உதவி அல்லாமல் வேறு எந்த வசதிகளையும் செய்து தர அரசு முன்வர இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் இந்தக் கிருத்துவ அரிசனங்களுக்கு, இந்து அரிசனங்களுடைய சலுகைகள் கிடைக்கப்படவில்லை. அமைச்சர் அவர்கள் சொல்வது போல லோன்களும் கிடைக்கப்படுவதில்லை என்பது மட்டுமல்லாமல், பல்வேறு சலுகைகளும் மறுக்கப்படுகின்றன. மதம் என்பதால், அவர்களுக்கு சலுகைகள் மறுக்கப்படுவதைத் தடுக்க சட்ட விதிகள் திருத்தப்பட வேண்டும் என்று சொன்னால் நிச்சயமாக திருத்த அமைச்சர் அவர்கள் முயல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1989 ஏப்ரல் 24

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆதி திராவிடக் கிருத்துவர்களுக்கு ஆதி திராவிட மக்களைப் போன்று சலுகைகள் கிடைக்கிறதா என்ற கேள்வியின் அடிப்படையில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மாநில அரசு ஆதி திராவிட மக்களுக்குக் கொடுக்கின்ற எல்லா சலுகைகளும் ஆதி திராவிடக் கிருத்துவ மக்களுக்கும் கிடைப்பதற்கான வழி, கடந்த காலத்திலே தி.மு.க. ஆட்சியிலே வகுக்கப் பட்டு, அறிவிக்கப்பட்டு, அது நடைமுறையிலே இருந்து வருகிறது. ஆனால் 18 சதவீதம் என்ற இட ஒதுக்கீடு, அவர்கள் பெற இயலாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஏன் என்றால், அரசியல் சட்ட விதிப்படி இந்த ரிசர்வேஷனை இந்து ஆதிதிராவிட மக்களைத் தவிர மற்றவர்களுக்கு வழங்க முடியாத நிலை இருந்து வருகிறது. அம்மையார் அவர்கள் கடன் வசதிகளைப் பற்றிக் கேட்டார்கள். மாநில அரசு தருகின்ற கடன்கள் அத்தனையும் ஆதி திராவிடர்களுக்குத் தரப்படுகிற கடன்கள் அத்தனையும் ஆதி திராவிடக் கிருத்துவப் பெருங்குடி மக்களுக்கும் தரப்படுகிறது. ஆனால், மத்திய அரசு தருகினற உதவி, கடன்கள், இவைகள் ஆதி திராவிடர்களுக்கு மாத்திரம் தான் தரப்படுகிறது. ஆதி திராவிடக் கிருத்துவப் பெருங்குடி மக்களுக்குத் தரப்படுவதில்லை. இது மத்திய அரசின் திட்டமாக இருக்கிற காரணத்தால். இப்போது, மத்திய அரசு இந்த 18 சதவித ஒதுக்கீட்டையும் ஆதி திராவிடக் கிருத்துவப் பெருங்குடி மக்களுக்கும் இணைத்து வழங்கவேண்டும் என்ற ஒரு கோரிக்கை மத்திய அரசால் பரிசீலிக்கப்படவும் கடன் போன்ற இந்த உதவிகளை ஆதி திராவிடக் கிருத்துவர்களுக்கு வழங்கவும் மத்திய அரசால் பரிசீலிக்கப்படவும், மாண்புமிகு அமைச்சர் பூட்டாசிங் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு அது ஆராயப்பட்டு வருகிறது. அதனுடைய முடிவுகள் நாம் எதிர்பார்க்கின்றபடி நல்ல வகையில் அமையும் என்று விரும்புகிறோம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஆதி திராவிட மக்கள், ஆதி திராவிட கிருத்துவர்கள் பற்றிய பதிலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே மாதிரி ஆதி திராவிட மக்களிலிருந்து முஸ்லீம்களாக மாறிய மக்களுக்கு இந்தச் சலுகையை மாநில சர்க்கார் கொடுக்கிறதா, மத்திய சர்க்காரின் நிலை என்ன என்பதை அறிய விருப்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, முதலில் ஆதி திராவிடர்களாக இருக்கின்ற கிருத்துவப் பெருங்குடி மக்களுடைய பிரச்சினை தீரட்டும், பிறகு, இதைப் பற்றி யோசிக்கலாம்,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS